முழுப்பதிப்புரிமையுடையது [All Rights Reserved]

மாகாணக் கல்வித் திணைக்களம், வடமாகாணம் Provincial Department of Education, Northern Province

மாகாணக் கல்வித் திணைக்களம், வடக்கு மாகாணம்

Provincial Department of Education, Northern Province

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர) மூன்றாம் தவணைப் பரீட்சை – 2026

General Certificate of Education (Adv. Level) 3rd Term Exam – 2026

கர்நாடக சங்கீதம் **Carnatic Music**	**Grade 12**	**TI &II**	**55**

மூன்று மணித்தியாலம்
பத்து நிமிடம்

அறிவுறுத்தல்:

1. **எல்லா** வினாக்களுக்கும் விடை தருக.
2. விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது **சுட்டெண்ணை எழுதுக**.
3. விடைத்தாளில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.
4. ***1*** தொடக்கம் ***20*** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிற்க்கும் (1), (2), (3), (4), (5) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப்பொருத்தமான** விடையைத் தெரிந்தெடுத்து **அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய** விடைத்தாளில் **புள்ளடி (X)** இடுவதன் மூலம் காட்டுக.
5. **பகுதி II "அ" பகுதியிலுள்ள எல்லா வினாக்களுக்கும் "ஆ" பகுதியிலிருந்து ஒரு வினாவிற்கும் "இ" பகுதியில் மூன்று வினாக்களுக்குமாக மொத்தம் ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

பகுதி - I

❖ எல்லா வினாக்களுக்கும் விடை தருக

1) பின்வருவனவற்றுள் பஞ்சம வர்ஜ இராகமாக அமைவது
   1. மத்தியமாவதி 2. ஸ்ரீரஞ்சனி 3. மோகனம் 4. ஹம்சத்வனி 5. ஆரபி

2) உப தாள வாத்தியம்
   1. டொல்கி 2. தவில் 3. மிருதங்கம் 4. முகர்சிங் 5. தபேலா

3) மத்திமகால சாகித்தியத்தை கொண்டமைந்த உருப்படி
   1. "கோபிகா மனோகரம்" 2. "ஞானம் அருள்வாய்"
   3. "பார்வதி நாயகனே" 4. "தேவி நீயே துணை"
   5. "சிவ சிவ என"

4) **"ப்ருந்தாவனி"** இராகத்திலமைந்த தில்லானாவை இயற்றியவர்
   1. லால்குடி ஜெயராமன் 2. மஹா வைத்தியநாதய்யர்
   3. பாலமுரளி கிருஷ்ணா 4. வீரபத்திர ஐயர்
   5. குன்றக்குடி கிருஷ்ணய்யர்

Past Papers Wiki

 முழுப்பதிப்புரிமையுடையது | All Rights Reserved

5) கூட்டாக நிகழ்ச்சிகளைத் தயாரிப்பதன மூலம் மாணவர்களிடம் விருத்தியடையும் பண்பு அல்லாதது

1. கூட்டுறவு 2. தன்மானப்பாங்கு 3. விட்டுக்கொடுத்தல் 4. மற்றவர்களை மதித்தல்
5. போட்டி மனப்பாங்கு

6) பின்வருவனவற்றுள் ஹந்துஸ்தானி வாத்தியங்களைக் கொண்ட தொகுதி

1. வயலின், ஸிதார் 2. வீணை, ஸரோட்
3. ஸரோட், ஸிதார் 4. கோட்டு வாத்தியம் , ஸரோட்
5. முகர்சிங் , ஸிதார்

7) **"கவிகாளமேகம்"** என்ற திரைப்படத்தில் நடித்தவர்

1. இராஜரத்தினம் பிள்ளை 2. வீணை பாலசுந்தர்
3. M.L வசந்தகுமாரி 4. M.S சுப்புலட்சுமி
5. வீரமணி ஐயர்

8) பின்வருவனவற்றுள் சூத்திர கண்டத்தில் அமைந்த இலட்சண கீதம்

1. "ரேவதி ராகம்" 2. "ரவிகோடி"
3. "முகாரி ராகம்" 4. "வாரணமுகனே"
5. "நடனமாடிய பாதம்"

9) "ஒரு பொழுதும்" என்ற திருப்புகழ் அமைந்த தாளம்

1. திஸ்ரஜம்பை 3. மிஸ்ரஜம்பை
3. கண்ட அட 4. சங்கீர்ண ஜம்பை
5. சங்கீர்ண அட

10) ஒரே இடத்தில் வைக்கப்பட்டு வாசிக்கப்படும வாத்தியம்

1. நிஷ்கள வாத்தியம் 2. சகல வாத்தியம்
3. ஸாதக வாத்தியம் 4. சர வாத்தியம்
5. ஸ்திர வாத்தியம்

11) 10 தாட் முறைகளை அறிமுகப்படுத்தியவர்

1. தான்சேன் 2. பாத் கண்டே 3. மொளாட் 4. அமிர்குஸ்ரு 5. பீதோவன்

12) அடதாள வர்ணத்தில் ஒரு ஆவர்த்தனத்தில் வரும் அட்சரங்களின் எண்ணிக்கை

1. 24 2. 36 3. 56 4. 72 5. 108

13) பின்வருவனவற்றில் சௌக்க காலத்தில் அமைந்த காவளியும் அதன் இராகமும்

1. "ஸகிபிராண" – செஞ்சுருட்டி 2. "வேதநீவு" – சுருட்டி
3. "வகலாடி" - ஹிந்துஸ்தான் பெஹாக் 4. "வாணிபெந்து" – கானடா
5. "நீமாடலே" – பூர்வி

 முழுப்பதிப்புரிமையுடையது [All Rights Reserved]

14) ஆபோகி இராகத்தின் மத்திம மூர்ச்சனையில் உருவாகும் இராகம்
1. திலங் 2. காபி 3. பூர்வி 4. வலகி 5. மாண்டு

15) "மைம்மரு பூங்குழல்" என்ற தேவாரம் அமைந்த பண்
1. தக்கேசி 2. முல்லை 3. கொல்லி 4. பழம்பஞ்சுரம் 5. நட்டபாடை

16) மனோதர்ம சங்கீதத்தில் பதம் லயம் வின்னியாசம் மூன்றும் ஒருங்கே பாடப்படும் பிரிவு
1. தானம் 2. நிரவல் 3. பல்லவி 4. இராகம் 5. கற்பனாஸ்வரம்

17) இரண்டு விவாதி ஸ்வரங்களை எடுத்துக்கொள்ளும் மேளங்கள்
1. 1, 7, 32, 36, 42, 47, 52, 62
2. 1, 6, 31, 36, 42, 67, 72
3. 6, 7, 42, 54, 62, 63, 64, 72
4. 1, 4, 16, 20, 32, 42, 52, 66
5. 8, 10, 16, 18, 34, 36, 42, 72

18) பீதோவனின் வாழ்க்கைக் காலம்
1. **1770 – 1827** 2. **1756 - 1791** 3. **1685 – 1750** 4. **1765 – 1825** 5. **1670 – 1820**

19) தனது உருப்படிகளில் **பரியாய** முத்திரையைக் கையாண்ட வாக்கேயகாரர்
1. அருணகிரிநாதர்
2. பைடாலகுருமூர்தி சாஸ்திரிகள்
3. முத்துஸ்வாமி தீட்சிதர்
4. ஸ்வாதி திருநாள் மகாராஜா
5. தியாகராஜர்

20) **"பூதவேதாள"** வகுப்புப் பாடலில் பஞ்ச தாளங்களைப் பற்றிக் குறிப்பிட்டவர்
1. திருஞானசம்பந்தர்
2. திருநாவுக்கரசர்
3. அருணகிரிநாதர்
4. சுந்தரமூர்த்தி நாயனார்
5. மாணிக்கவாசகர்

PAST PAPERS WIKI

21) நாட்டிய நிகழ்ச்சியில் 7 வதாக இடம்பெறும் உருப்படி
1. ஜதீஸ்வரம் 2. பதம் 3. அஷ்டபதி 4. கீர்த்தனை 5. தில்லானா

22) ஒரு இராகத்தைப் பாடும் போது இடையிடையே முடியும் ஸ்வரம்
1. கிரகம் 2. அவன்னியாசம் 3. சன்னியாசம் 4. வின்னியாசம் 5. அல்பத்துவம்

23) அனுலோம, விலோமக் கிரமமாக சிட்டை ஸ்வரம் அமைந்த உருப்படி
1. "நீதிமதி சல்லக"
2. "பாஹிமாம் ஸ்ரீ"
3. "மாரமணன்"
4. "ஜெகதீஸ்வரி"
5. "ப்ரோசேவா"

Past Papers Wiki

 முழுப்பதிப்புரிமையுடையது | All Rights Reserved

24) "பாஹிமாம் ஸ்ரீ" என்ற சௌக்க காலக் க்ருதி அமைந்த இராகம்

1. ப்ருந்தாவனி 2. ஹம்சத்வனி 3. ஜனரஞ்சனி 4. ஹிந்தோளம் 5. வசந்தா

25) பிலிப்பைன்ஸ் நாட்டின் மிக உயர்ந்த விருதா "மக்சாசாய்" விருதினைப் பெற்றவர்

1. M.L வசந்தகுமாரி
2. சிட்டிபாபு
3. N.S உருத்திராபதி
4. M.S சுப்புலட்சுமி
5. பாலசந்தர்

(25 × 1 = 25புள்ளிகள்)

பகுதி II

❖ **"அ" பகுதியில் எல்லா வினாக்களுக்கும், "ஆ" பகுதியில் இருந்து ஒரு வினாவிற்கும், "இ" பகுதியிலிருந்து மூன்று வினாக்களுக்கும், மொத்தமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

பகுதி "அ"

01.

1. **"அரபிமானம்"** என்ற இராகமாலிகையை இயற்றியவர் யார்?
2. **"ஆபோகி"** இராகத்தில் விலக்கப்பட்ட ஸ்வரங்கள் எவை?
3. இசைக்கருவிகளின் பிரிவுகள் பற்றி குறிப்பிடும் நூல் எது?
4. **"ஆரோகணம் அவரோகணம்"** இரண்டும் வக்ரமாக உள்ள இராகம் எவ்வாறு அழைக்கப்படும்?
5. **ஊஞ்சல் பாடல்கள், தாலாட்டு பாடல்கள்** பாடுவதற்கு மிகப் பொருத்தமான இராகம் எது?
6. **"க்ருதிகளை"** அலங்கரிக்கும் இசையணிகளுள் தாது மாது சம்பந்தமான இசைஞானிகள் எவை?
7. **அமிர்குஸ்ருவால்** உருவாக்கப்பட்ட வாத்தியங்கள் இரண்டு தருக?
8. **திருப்புகழ்** தவிர அருணகிரிநாதரால் இயற்றப்பட்ட நூல்கள் இரண்டு தருக?
9. பாமர **ஜனகான** வாத்தியங்கள் இரண்டு தருக?
10. **பாசாங்க இராகங்கள்** இரண்டு தருக?

(1 + 1 + 1 +1 + 1 + 2 + 2 + 2 + 2+ 2 = 15 புள்ளிகள்)

பகுதி "ஆ"

02. இசைக்கருவிகளின் பிரிவுகள் பற்றி விரிவாக விளக்குக.

(15 புள்ளிகள்)

03. பின்வருவனவற்றுள் ஒன்றிற்கு விரிவான இலட்சணம் தருக.

1. தில்லானா
2. இலட்சகீதம்
3. கிருதி

(15 புள்ளிகள்)

(முழுப்பதிப்புரிமையுடையது | All Rights Reserved)

பகுதி "இ "

04. பின்வரும் இராகங்களில் ஒன்றிற்கு விரிவான இலட்சணம் தருக.
ஸ்ரீரஞ்சனி

ஹம்சத்வனி

மதஸ்தா - மகரி - ஸரிஸதஸா

(15 புள்ளிகள்)

05.

1. அருணகிரிநாதரின் வாழ்க்கை காலம் யாது?
2. இவரது வாழ்க்கைச் சம்பவங்கள் , இசைக்காற்றிய தொண்டுகள் என்பவற்றைத் தருக?
3. இவரது சிறப்பு பெயர்கள் நான்கு தருக?
4. திருப்புகழ் பாடல்களுக்கு உதாரணம் நான்கு தருக?

(1 + 2 + 2 + 10 = 15 புள்ளிகள்)

06.

1. மகாநாடக வீணை என அழைக்கப்படும் வாக்கியம் எது?

(01 புள்ளிகள்)

2. இவ்வாத்தியத்தின் படம் வரைந்து, பாகங்களை குறிக்குக.

(04 புள்ளிகள்)

3. இவ்வாத்தியத்தின் அமைப்பு, சிறப்பு, வாசிக்கும் முறை என்பவற்றை தருக. இவ்வாத்தியத்தை வாசிப்பதில் பிரபல்யமான வித்துவான்கள் இருவரின் பெயரினை தருக?

(10 புள்ளிகள்)

(1+4+10= 15 புள்ளிகள்)

07.

1. மேலைத்தேய இசைவாக்கேயகாரர்கள் மூவரின் பெயரினைத் தருக?

(03 புள்ளிகள்)

2. மேற்குறிக்கப்பட்டவர்களுள் ஒருவரின் வாழ்க்கை வரலாறு, இசைப்பணி பற்றி விரிவாக ஆராய்க.

(12 புள்ளிகள்)

(3+12 = 15 புள்ளிகள்)

08. உமது பாடசாலையில் வருட இறுதியில் நடைபெறவுள்ள இசை நிகழ்வு ஒன்றினை தயாரித்து மேடையேற்றுவதற்கான செயல் ஒழுங்கினை விரிவாக விளக்குக.

(15 புள்ளிகள்)

***

PAST PAPERS WIKI
WWW.PastPapers.WiKi
Downloaded From Past Papers WiKi - Sri Lanka's Largest Past Papers Library